**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
- - - - -

# IN THE COURT OF THE SESSIONS JUDGE, MAHALIR NEETHIMANDRAM, MADURAI.

| | | |
|---|---|---|
| **Case No.** | : | **SC NO. 581 / 2018** |
| **Deposition of witness for** | : | **PW : 4** |
| **Name** | : | திருமதி. மதுபாலா |
| **Father's Name** | : | |
| **Village** | : | |
| **Taluk** | : | |
| **Caste** | : | |
| **Calling** | : | |
| **Religion** | : | |
| **Age** | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **14.07.2022**

**முதல் விசாரணை :**

நான் மதுரை, சோலைஅழகுபுரத்தில் குடியிருந்து வருகிறேன். நான் வீட்டுக்குடித்தனம் செய்கிறேன். இந்த வழக்கின் எதிரிகளைத் தெரியும். எனது அத்தை மகள் சிவப்பிரியாவின் கணவர் 1 வது எதிரி ஆவார். 2 வது எதிரி அவரது மாமியார். 7 ம் தேதி 9 ம் மாதம் 2016 ம் வருடம் சிவப்பிரியாவிற்கு 1 வது எதிரி விருமாண்டியுடன் திருமணம் நடந்தது. சிவப்பிரியாவின் அப்பா திருமணத்திற்கு ஒருவருடத்திற்கு முன்பு கேன்சர் வந்து இறந்துவிட்டார். அவர் இறந்து 6 மாசம் 9 மாசம் இருக்கும் போது எனது அத்தை சிவப்பிரியாவிற்கு எனது நாத்தனார் பையனை கேட்பதாக என்னிடம் சொன்னார்கள். சொந்தக்காரர்கள் தானே, சரி, கட்டிக்கொடு என்று எனது அம்மா சொன்னார்கள். திருமணத்தின் போது சிவப்பிரியாவிற்கு 30 பவுன் நகை போட்டார்கள். சீர் வரிசை 3 லட்சம் செய்தார்கள். திருமணத்திற்கு பிறகு கீழக்குயில்குடியில் 1 வது எதிரியுடன், சிவப்பிரியாவும், அவரது மாமியார், மாமனாருடன் குடியிருந்தார். திருமணத்திற்கு 2 மாதத்திற்கு பிறகு சிவப்பிரியா மாசமாக இருப்பதாக சொன்னார்கள். அதற்கு கொஞ்ச நாட்கள் கழித்து., சிவப்பிரியாவின் நகையை வட்டிக்கு விட வேண்டும் என்று

கேட்டுள்ளார்கள். சிவப்பிரியாவின் மாமனார், மாமியார் கேட்டு பிரச்சனை செய்துள்ளார்கள். தற்போது சிவப்பிரியா மாசமாக உள்ளதால் கொஞ்சநாள் போகட்டும் என்றும், வளைகாப்பு முடியட்டும் என்றும் எனது அத்தை அசா1 சொன்னார். அதன் காரணமாக சிவப்பிரியா வீட்டில் பிரச்சனைஆகி அவர் 2,3 முறை கோவிச்சுக்கிட்டு அவரது அம்மா வீட்டிற்கு வந்துள்ளார். அதன் பிறகு எனது அத்தை அசா1 சிவப்பிரியாவை சமாதானம் செய்து அனுப்பிவைத்துள்ளார். அதன் பிறகு 04.02.2017 அன்று சிவப்பிரியா இறந்துவிட்டதாக எனது அம்மா எனக்கு போன் செய்து சொன்னார். எனக்கு போன் செய்த நேரம் காலை சுமார் 09.00, 09.15 இருக்கும். தகவல் வந்தவுடன் உடனடியாக நாங்கள் கிளம்பி கீழகுயில்குடிக்கு சிவப்பிரியா வீட்டிற்கு சென்று பார்த்தோம். நானும், எனது கணவர் சசிக்குமாரும் சென்றோம். அங்கு எனது அத்தை, அத்தை பையன், எனது அம்மா அனைவரும் அழுதுகொண்டு இருந்தார்கள். சிவப்பிரியாவை போர்வை வைத்து பொத்தி வைத்திருந்தார்கள். அவர் போட்டிருந்த நைட்டி சிறிது கிழிந்து இருந்தது. நான் எனது அத்தை அசா1 இடம் என்ன அத்தை, என்ன நடந்துச்சு என்று கேட்டோம். கேட்டுக்கொண்டு இருந்போது, என்ன நடந்துச்சுனு தெரியல என்றும், என் மக தூக்கு போட்டுடுச்சு என்று சொல்கிறார்கள் என்றும், என் மக இப்படி எல்லாம் செய்யாது என்றும் அசா1 எனது அத்தை என்னிடம் சொன்னார். அங்கிருந்த 4 பேர், சாந்திபூசன், சின்னச்சாமி, மலைச்சாமி, ஜெயபிரகாஷ் ஆகியோர் அந்த ஊர்காரர்கள் சிவப்பிரியாவின் உடலைத் தூக்கினார்கள். அவர்கள் தூக்கும் போது, கொஞ்சம் இருங்கள், எங்களுக்கு மரணத்தில் சந்தேகமாக உள்ளது. போலிசுக்கு கம்ப்ளெயின்ட் கொடுக்கிறோம் என்று சொன்னேன். அவர்கள் போலிசுக்கு எல்லாம் சொல்ல வேண்டாம். பேசிக்கொள்ளலாம் என்று சொன்னார்கள். நான் 100 க்கு போன் அடிச்சேன். நான் சொன்ன உடன் எனது அத்தை அசா1 கத்திக்கொண்டு மயக்கம் போட்டு கீழே விழுந்துவிட்டார். நான் 100 க்கு போன் அடித்தவுடன் எல்லாரும் பதட்டமாகி கத்த ஆரம்பித்து விட்டார்கள். அப்போது எனது அத்தை மயக்கம் போட்டுவிட்டார். அதன்

பிறகு எனது அத்தை அசா1 ஐ மருத்துவமனைக்கு கொண்டு சென்றோம். ஹாஸ்பிடலில் எனது அத்தை அசா1 ஐ விட்டுவிட்டு, ஏதும் செய்துவிடுவார்கள் என்று சிவப்பிரியா வீட்டிற்கு நானும் எனது கணவரும் வந்துவிட்டோம். நாங்கள் வந்த போது சிவப்பிரியாவின் உடலை சுடுகாட்டிற்கு தூக்கிகொண்டு சென்றுவிட்டார்கள். பின்னர் நானும் எனது கணவரும் சுடுகாட்டிற்கு சென்றுவிட்டோம். நாங்கள் சென்றபோது, சிவப்பிரியா உடம்பில் மண்ணெண்ணெய் ஊற்றி, சீனி எல்லாம் போட்டு, அருகில் இருந்த குப்பை, செடி களை பிடுங்கி போட்டு எரித்தார்கள். (சாட்சி பேச இயலாமல் அழுகிறார்). நாங்கள் தடுக்கபோன போது, எங்களை விடாமல் பிடித்துக்கொண்டார்கள். கீழக்குயில்குடி ஊர்கார்களும், 4,5 பேரும் சேர்ந்து எரித்தார்கள். அதனால் எங்களை பிடித்துக்கொண்டார்கள். கொஞ்ச நேரத்தில்2,3 ஆபிசர்கள் வந்தார்கள். ஒரு மேடம், ஒரு சார் மற்றும் 2,3 பேர் வந்தார்கள். சிவப்பிரியா தூக்குப்போட்டு கொண்ட இடம், வீடு, மற்றும் அவரை எரித்த இடத்தை பார்த்தார்கள். அதற்கு பிறகு கொஞ்ச நேரம் கழித்து கம்பௌயிட் கொடுக்கலாம் என்று ஸ்டேசன் சென்றோம். மறுநாள் எங்களை கலெக்டர் ஆபிசுக்கு அழைத்தார்கள். அப்போது என்னையும் எனது கணவரையும் விசாரிக்கவில்லை. எனது அத்தை அசா1 ஐயும், அவரது மகனையும் விசாரணை செய்தார்கள். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் கு.வி.</u>**

உறவினர்கள் எல்லாருமே, மதுரை ஜெய்கிந்துபுரம், சோலைஅழகுபுரம், செல்லூர் ஆகிய பகுதிகளில் உள்ளோம். நான் எனது கணவருடன் இரு சக்கர வாகனத்தில் கீழக்குயில்குடிக்கு சென்றேன். கீழக்குயில்குடி பஸ் ஸ்டாப்பில் இருந்து சுமார் 1 கிமீ தூரத்தில் 1 வது எதிரியின் வீடு உள்ளது. அந்த ஊரில் குறைந்தது சுமார் 500 வீடுகள் இருக்கும் என்றால் 10 வீடுகள் தான் இருக்கும். கீழகுயில்குடி ஊருக்கு பஸ்சில் நான் சென்றது இல்லை. அங்கு 1 வது எதிரியின் வீட்டில் இருந்து எந்த திசையில் எவ்வளவு தூரத்தில் சுடுகாடு உள்ளது என்று எனக்குத் தெரியாது. பொதுவாக, காரியங்கள் செய்ய எங்கள்

வீட்டில் இருந்து எடுத்துச்செல்லும்போது, நாங்கள் யாரும் தடுத்து நிறுத்தவில்லை என்றால் சரியல்ல. நடுத்து நிப்பாட்டும்போது பேசிக்கொள்ளலாம் என்று சொன்னார்கள். போலிசார் என்னை வழக்கு சம்பந்தமாக காவல்நிலையத்தில் வைத்து சிவப்பிரியா இறந்த அன்று புகார் கொடுக்க போனபோது விசாரணை செய்தார்கள். அப்போது, நான் தற்போது சொன்னது போல், எங்களுக்கு சந்தேகமாக உள்ளது, போலிசுக்கு போகலாம் என்று சொன்ன விபரத்தை போலிசார் விசாரணையின் போதும் சொன்னேன். 100 க்கு போன் செய்தோம், உடனே எல்லாரும் கத்தினார்கள் என்றும், அசா1 க்கு மயக்கம் வந்துவிட்டது என்று போலிசார் விசாரணையின் போது சொன்னேன். நானும் எனது கணவரும் தான் எனது அத்தை அசா1 பாக்கியலெட்சுமியை ஆஸ்பத்திரியில் சேர்த்துவிட்டு, ஏதாவது செய்துவிடுவார்கள் என்று நினைத்து உடனே சிவப்பிரியா வீட்டிற்கு வந்து விட்டோம் என்று போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேன். திரும்பி வந்த போது, நேரா வீட்டிற்கு போகாமல் சுடுகாட்டிற்கு சென்றோம் என்று போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேன். மண்ணெண்ணெய் ஊற்றி, ஜீனி, அங்கிருந்த காய்ந்த குச்சிகளை போட்டு எரித்தார்கள் என்று போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேன். நாங்கள் தடுக்கப்போனோம் எங்களை தடுக்க விடாமல் பிடித்துக்கொண்டார்கள் என்று போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேன். நான் 10 ம் வகுப்பு வரைபடித்துள்ளேன். ஒரு மேடம், ஒரு சார், 2,3 பேர் வந்தார்கள் என்றும், வீடு, சுடுகாடு எரித்த இடம் ஆகியவற்றை பார்த்தார்கள் என்று போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேன். மேடம், சார், 2,3 பேர் வந்த போது மணி என்ன இருக்கும் என்று ஞாபகம் இல்லை. வந்தவர்கள் வீடு, சுடுகாடு ஆகியவற்றை பார்த்து வரைபடம் வரைந்தார்களா என்று ஞாபகம் இல்லை. எரிந்த இடத்தை பார்க்க சென்றபோது நான் உடன் சென்றேன். என் வீட்டுக்காரரும் உடன் வந்தார். நாங்கள் தான் சிவப்பிரியாவை எங்குவைத்து எரித்தார்கள், எப்படி எரித்தார்கள் என்று, அங்கு வந்த மேடம், சார், 2,3 பேரிடம் சொன்னோம். அப்போது, நாங்கள் சொன்னதை அவர்கள் எழுதிக்கொண்டார்களா என்று ஞாபகம் இல்லை.

அவர்கள் எல்லாம் இடமும் பார்த்தபோது, சுமார் 3/4 மணி நேரம் ஆகி இருக்கும். அந்த 3/4 மணி நேரமும் என்னுடன் எத்தனை பேர் அந்த ஊர்காரர்கள் உடன் இருந்தார்கள் என்றால் அனைவரும் அங்கு தான் இருந்தார்கள். எண்ணக்கூடிய அளவை விட அதிகமாக இருந்தார்கள். என்னை விசாரணை செய்ததுபோல், அங்கு கூடி இருந்த நபர்களை அந்த மேடம், சார் ஆகியோர் விசாரணை செய்தார்களா என்று ஞாபகம் இல்லை. என்னை விசாரணை செய்த போது, அசா1 பாக்கியலெட்சுமி, அவரது மகன், கழுவத்தேவர் ஆகியோர் அங்கு தான் இருந்தார்கள். அந்த இடத்தில் வைத்து இன்னார் தான், இன்னார்தான் எரித்தார்கள் என்று நான் சொல்லவில்லை. காவல்நிலையத்திற்கு நாங்கள் கிளம்பும் போது சுமார் 05.00 மணி இருக்கும். 05.00 மணி வரை நாங்கள் அனைவரும் சிவப்பிரியா இருந்த 1 வது எதிரியின் வீட்டில் தான் இருந்தோம். சம்பவ தினத்தில் போலிசார் வந்தார்களா என்று ஞாபகம் இல்லை. நாங்கள் போகும் போது அசா1 பாக்கியலெட்சுமியை எனது அத்தை மகன் தான் ஆஸ்பத்திரியில் இருந்து கூட்டிவந்தார். அசா1 ஐ என்ன ஆஸ்பத்திரி, எந்த ஊரில் சேர்த்தோம் என்று போலிசார் விசாரணையில் சொன்னேனா என்றால் அப்போது சொல்லியிருப்பேன், தற்போது ஞாபகம் இல்லை. எனது அத்தை மகள் அன்னலெட்சுமி, அத்தை மகன் அருண் இருவரும் சம்பவத்திற்கு 1 மாதம் மற்றும் 1 வருடத்திற்கு முன்பாக மருந்து குடித்து ஆஸ்பத்திரியில் வைத்தியம் செய்து கொண்டது எனக்குத் தெரியும். இறந்து போன சிவப்பிரியா மாசமாக இருந்தது தொடர்பாக, எந்த ஆஸ்பத்ரிக்கும் அழைத்துச்சென்று உறுதி செய்தோமா என்றால் எனது அத்தை சொன்னார். எனக்கு நேரடியாகத் தெரியாது. அதனால் வளைகாப்பு, சீமந்தம் குறித்து நாள் எதுவும் குறிக்கவில்லை. எனது அத்தை பிள்ளைகளுக்கு, மற்றவர்களை மிரட்டி, தன் தவறுகளை மறைத்துக்கொள்ள வேண்டும் என்பதற்காக மருந்து குடிக்கும் பழக்கம் உண்டு என்றால் சரியல்ல. அது போல், சிவப்பிரியாவும், அவரது கணவர் வீட்டாரை மிரட்டுவதற்காக நடகமாட தூக்குப்போட்ட போது அது விபரீதம் ஆகிவிட்டது என்றால் சரியல்ல. மற்ற இருபிள்ளைகளைப்போல்

சிவப்பிரியா கிடையாது. அவர் bold ஆனவர். ஜெயபிரகாஷ், அருணின் பெரியப்பா பையன் ஆவார். சிவப்பிரியா, சாவதை எரிப்பதாலோ, காவல்நிலையத்தில் புகார் கொடுப்பதாலோ அவருக்கு எந்த பிரச்சனையும் இல்லை. சாந்திபூசன், மலைச்சாமி, ஆகியோர் எதிரிகளுக்கு எந்த சொந்தம் என்றும், எங்களுக்கு எந்த சொந்தம் என்றும் எனக்குத் தெரியாது. மலைச்சாமி, சாந்திபூசனை நான் சம்பவத்திற்கு முன்பு பார்த்தது கிடையாது. இந்த பெயர்கள் எல்லாம் அங்கு இருந்தவர்கள் சொன்னார்கள். காவல்நிலையத்தில் புகார் கொடுக்க நானும் எனது அத்தை அசா1 உடன் சென்றேன். ஊர் மக்கள் பெயர் சொன்னதை எல்லாம் நான் விசாரணை செய்து தெரிந்து கொண்ட பின்னர் தான் காவல்நிலையத்திற்கு புகார் கொடுக்க சென்றோம். ஆனால் புகாரில் அவர்கள் பெயர்கள் பற்றி சொல்லவில்லை என்றால் சொல்லத்தான் செய்தோம். ஒரு மேடம், சார் வந்தவர்களிடமும் இந்த பெயர்களை எல்லாம் நான் சொல்லியுள்ளேன். என் அத்தை அசா1 கேட்டுக்கொண்டதன் பேரில், எனது அத்தையைக் காப்பாற்ற வேண்டி இப்போது பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொன்னது போல, சொன்ன விதத்தில் சம்பவம் எதுவும் நடக்கவில்லை என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

அமர்வு நீதிபதி,
மகளிர் நீதிமன்றம்,
மதுரை

**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
- - - - -

# IN THE COURT OF THE SESSIONS JUDGE, MAHALIR NEETHIMANDRAM, MADURAI.

| | | |
|---|---|---|
| **Case No.** | **:** | **SC NO. 581 / 2018** |
| **Deposition of witness for** | **:** | **PW : 5** |
| **Name** | **:** | **திரு. சசிகுமார்** |
| **Father's Name** | **:** | |
| **Village** | **:** | |
| **Taluk** | **:** | |
| **Caste** | **:** | |
| **Calling** | **:** | |
| **Religion** | **:** | |
| **Age** | **:** | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **14.07.2022**

**முதல் விசாரணை :**

நான் மதுரை, சோலைஅழகுபுரத்தில் குடியிருந்து வருகிறேன். சேல்ஸ் ரெப்பாக வேலை செய்கிறேன். அசா4 எனது மனைவி. வழக்கின் எதிரிகளைத் தெரியும். ஆஜர் எதிரிகளில் 1 வது எதிரி எனது மாமனாரின் தங்கை மருமகன். 2 வது எதிரி எனது மாமனாரின் தங்கை. கடந்த 07.09.2016 அன்று எனது மாமனாரின் தங்கை மகளுக்கும், 1 வது எதிரிக்கும் நாகமலைபுதுக்கோட்டையில் வைத்து திருமணம் நடந்தது. திருமணத்திற்கு நான் சென்றிருந்தேன். சிவப்பிரியாவின் திருமணத்திற்கு 30 பவுன் நகை போட்டார்கள். சீர் பொருட்கள் சுமார் 3 லட்சம் மதிப்பில் செய்தார்கள். திருமணத்திற்கு பிறகு, 1 வது எதிரியுடன் கீழக்குயில்குடியில் சிவப்பிரியா வசித்து வந்தார். சிவப்பிரியாவின் திருமணத்திற்கு பிறகு, மாசமாக இருப்பதாக சொன்னார்கள். சிவப்பிரியா எனது மாமனாரின் தங்கை மகள் ஆவார். அதற்கு பிறகு நகை பிரச்சனை ஓடிக்கொண்டு இருப்பதாக எனது மனைவி சொன்னார். ஏதோ தொழில் செய்ய சிவப்பிரியாவின் நகையை கேட்பதாக 1 வது எதிரி விருமாண்டியும் அவரது அம்மாவும் கேட்பதாக சொன்னார். ஆனால் சிவப்பிரியா நகையைக் கொடுக்கவில்லை. அதற்கு

பிறகு 2,3 மாதம் கழித்து சிவப்பிரியா இறந்துவிட்டதாக எனது மாமியார் எனக்கு போன் அடித்து சொன்னார். 04.02.2017 அன்று சிவப்பிரியா இறந்துவிட்டதாக சுமார் காலை 09.30 மணிக்கு சொன்னார். நானும் எனது மனைவியும் சிவப்பிரியா வீட்டிற்கு சென்றோம். கீழக்குயில்குடிக்கு சென்று பார்த்தோம். அப்போது நாங்கள் சென்று பார்த்தபோது, நான், என் அத்தை அசா1, எனது மனைவி ஆகியோர் அப்போதைக்கு சென்றிருந்தோம். சிவப்பிரியாவின் மரணத்தில் சந்தேகமாக உள்ளது என்று 100 க்கு போன் செய்து சொன்னார். எதிரி சைடு யார் இருந்தார்கள் என்று ஞாபகம் இல்லை. அதற்கு பிறகு எனது சின்னம்மா பாக்கியலெட்சுமி அசா1 மயக்கம் போட்டு விழுந்துவிட்டார். நானும் எனது மனைவி மற்றும் அசா1 ன் மகன் அவரை ஆஸ்பத்திரிக்கு கொண்டு சென்று சேர்த்தோம். அதற்கு பிறகு நானும் எனது மனைவி மட்டும் சிவப்பிரியா வீட்டிற்கு வந்தோம். அங்கு சிவப்பிரியாவை சுடுகாட்டிற்கு கொண்டுசென்றுவிட்டதாக சொன்னார்கள். பின்னர் நானும் எனது மனைவியும் சுடுகாட்டிற்கு சென்றோம். அங்கு 3 விறகு, ஒரு பாட்டிலில் மண்ணெண்ணெய், கொஞ்சம் ஜீனி போட்டு எரித்து கொண்டு இருந்தார்கள். நாங்கள் தடுக்க சென்றபோது எங்களை பிடித்துக்கொண்டார்கள். 1 வது எதிரியின் வீட்டைச் சேர்ந்த சுமார் 6,7 நபர்கள் அங்கு இருந்தார்கள். அதன் பிறகு போலீஸ் ஸ்டேசன் என்று நடந்ததை சொன்னோம். RDO மேடம் வந்தார்கள். அதன் பிறகு போலிஸ் ஸ்டேசனில் கம்ளெயின்ட் கொடுத்தோம். சிவப்பிரியாவின் இறப்பில் சந்தேகம் உள்ளது என்று கம்ளெயிண்ட் கொடுத்தோம். போலிசார் என்னை விசாரித்தார்கள்..

**<u>எதிரிகள் தரப்பில் கு.வி.</u>**

நான் சம்பவத்திற்கு பிறகு 2 1/2 வருடங்களாக சேல்ஸ் ரெப்பாக வேலை செய்கிறேன். சம்பவத்தின் போது, நான் கொடுக்கல் வாங்கல் தொழில் செய்து வந்தேன். எங்கள் சமூகத்தில் கொடுக்கல் வாங்கல் தொழில் செய்வது மிகவும் சகஜமான ஒன்றாகும். நானும் எனது மனைவியின் நகைகளை அடகு வைத்து தான் கொடுக்கல் வாங்கல் தொழில் செய்தேன்.

எனவே பொண்டாட்டியின் நகையை அடகு வைக்க கேட்டார்கள் என்று குற்றமாக சொல்வது வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. சோலைஅழகுபுரத்தில் இருந்து கீழகுயில்குடி சுமார் 10 ல் இருந்து 15 கிமீ தூரத்தில் இருக்கும். சிவப்பிரியா இறந்த தகவல் 09.00 மணிக்கு மேல் தான் கிடைத்தது. மதுரை, செல்லூர், செக்கானூரனியில் உள்ள எங்கள் உறவினர்களுக்கு எத்தனை மணிக்கு தகவல் கிடைத்தது என்று எனக்குத் தெரியாது. தகவல் தெரிந்த 1/2 மணி நேரத்திற்குள் நாங்கள் சென்றுவிட்டோம். 1 வது எதிரியின் வீட்டிற்கு செல்ல, பஸ் ஸ்டாப்பில் இருந்து 1 கீமீ தூரம் செல்லவேண்டும். கீழக்குயில்குடியில் உள்ள ஆட்கள் எங்கள் சமூகத்தை சேர்ந்தவர்கள் தான். எனவே ஒரு வீட்டில் எதுவும் சம்பவம் நடந்துவிட்டால் அங்கிருக்கும் மொத்த குடும்பத்திற்கும் தகவல் தெரிந்துவிடும். நான் சென்ற போது, கீழக்குயில்குடி ஊர்காரர்கள் சுமார் 20,30 பேர் இருந்தார்கள். அவர்கள் அனைவரும் எங்களுக்கு தெரிந்தவர்கள் மற்றும் சொந்தக்கார்கள். 1 வது எதிரியின் வீட்டில் இருந்து 2 கிமீ தொலைவில் சுடுகாடு உள்ளது. எந்த திசையில் உள்ளது என்று தெரியாது. சுடுகாட்டிற்கும், 1 வது எதிரியின் வீட்டிற்கும் இடையே சில வீடுகள் உள்ளது. நான் சென்று எவ்வளவு நேரம் கழித்து சிவப்பிரியாவின் உடலை தூக்கினார்கள் என்றால் 1 மணி நேரம் கழித்து எடுத்தார்கள். ஒருவரை மருத்துவமனை சென்று அட்மிஷன் செய்தால், அவர் யார் என்று குறிப்பு எழுதிக்கொள்வார்கள் என்றால் நான் அசா1 ஐ ஆஸ்பத்திரியில் விட்டுவிட்டு உடனேவந்துவிட்டதால் அவர்கள் எழுதினார்களா என்று தெரியாது. அசா1 ஐ எந்த ஆஸ்பத்திரியில் சேர்த்தேன் என்று ஞாபகம் இல்லை. நான் உண்மையில் அசா1 ஐ மருத்துவமனையில் சேர்த்திருந்தால் மருத்துவமனை பெயர் ஞாபகம் இருக்கும் என்றும், அவ்வாறு சேர்க்கவில்லை என்பதால் தான் ஞாபகம் இல்லை என்று பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. RDO அம்மா வந்த போது, அவரிடம் எனது சின்னம்மா அசா1 ஐ ஆஸ்பத்திரியில் சேர்த்துவிட்டு வந்தோம் என்று சொல்லவில்லை. RDO அம்மா 1 வது எதிரியின் கிராமத்திற்கு வந்த போது, மணி சுமார் 10.30, 11.00 மணி

இருக்கும். அதாவது நாங்கள் சென்று 1 1/2 மணி நேரத்தில் வந்தார்கள். RDO அம்மா வந்தபோது, ஊர் மக்கள் அங்கு தான் இருந்தார்கள். RDO அம்மா அங்கு வந்து , எங்களை விசாரித்து, என்ன நடந்தது, எப்படி நடந்தது என்று எழுதிக்கொண்டார். அவ்வாறு விசாரிக்கும்போது நான் தற்போது சொன்ன விபரங்களை சொன்னேன். போலிசார் என்னை விசாரணை செய்த போது, நாங்கள் என் அத்தை, நான், எனது மனைவி மட்டும் அங்கு சென்றிருந்தோம் என்று சொல்லியுள்ளேன். போனஉடனே 100 க்கு போன் செய்துவிட்டோம் என்று போலிசார் விசாரணையில் சொன்னேன். நானும் எனது மனைவியும் தான், அசா1 ஐயும், அசா2 ஐயும், ஆஸ்பத்திரிக்கு கொண்டு சென்றோம் என்று போலிசார் விசாரணையில் சொன்னேன். ஆஸ்பத்திரியில் இருந்து திரும்பி வந்தவுடன் 1 வது எதிரியின் வீட்டிற்கு சென்றபோது, சிவப்பிரியாவின் உடலை சுடுகாட்டிற்கு கொண்டுசென்றுவிட்டதாக சொன்னார்கள் என்று போலிசார் விசாரணையில் சொன்னேனா என்று ஞாபகம் இல்லை. சுடுகாட்டிற்கு சென்று பார்த்த போது, மண்ணெண்ணெய் ஊற்றி, ஜீனி போட்டு எரித்துக்கொண்டு இருந்தார்கள் என்றும், 6,7 பேர் இருந்தார்கள் என்றும், எங்களை தடுத்துவிட்டார்கள் என்றும் போலிசார் விசாரணையில் சொன்னேனா என்று ஞாபகம் இல்லை. சிவப்பிரியாவை அந்த கிராமத்து மக்கள், 1 வது எதிரி மற்றும் அவரது குடும்பத்தார் சேர்ந்து போலிசுக்கு தகவல் சொல்லி பிரேத பரிசோதனை செய்ய வேண்டும் என்று வைத்திருந்தார்கள் என்றால் 1 வது எதிரியின் குடும்பத்தார் தான் கொண்டு சென்று எரித்துவிட்டார்கள். சிவப்பிரியா இறந்த சம்பவம் பற்றி தெரிய வந்தால், அசா1 ன் இளைய மகள் அன்னலெட்சுமிக்கு திருமணம் நடக்காது என்று எங்கள் குடும்பத்தார் தான் சிவப்பிரியாவின் உடலை எரித்தோம் என்றால் சரியல்ல. RDO அம்மா எங்கள் ஊருக்கு வராமல் இருந்திருந்தால் சிவப்பிரியா இறந்த சம்பவத்தை மறைத்திருப்போம் என்றும், எங்கள் மீது பழி வந்துவிடக் கூடாது என்பதற்காகத்தான் கத்தி, ஆர்ப்பட்டம் செய்து எதிரிகள் மீது பழி போட்டோம் என்றால் சரியல்ல. 100 க்கு போன் செய்தது, காவல்துறையில் புகார் கொடுத்தது எல்லாம் இந்த

வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. RDO விசாரணை செய்த போது நாங்கள் போயிருந்தோம். ஆனால் எங்களை விசாரணை செய்யவில்லை. எங்களை விசாரணை செய்திருந்தால், உண்மை தெரிந்துவிடும் என்று அசா1 பாக்கியலெட்சுமி எங்களை விசாரணை செய்யவிடாமல் தடுத்துவிட்டார் என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் சிவப்பிரியாவின் உடல் எரியூட்டடப்படவில்லை என்றால் சரியல்ல. நான், அசா1 மற்றும் உறவினர்கள் சேர்ந்து, சிவப்பிரியாவின் உடலை எரித்துவிட்டு எதிரிகள் மீது பொய்யாக புகார் கொடுத்துள்ளோம் என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

அமர்வு நீதிபதி,
மகளிர் நீதிமன்றம்,
மதுரை